# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| 15 ஏப்ரல் 2018 | **பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு** | இரண்டாம் ஆண்டு |



அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

இயேசு உயிர்த்தெழுந்த நிகழ்ச்சி இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டது. இறந்த ஒருவர் மீண்டும் உயிர்பெற்று வந்தாலும் சில ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பவும் இறப்பார். இயேசுவின் வல்லமையால் சாவிலிருந்து விடுவிக்கப்பட்ட இலாசர் இவ்வாறே மீண்டும் இறந்தார். ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதல் அவ்வகையைச் சார்ந்ததல்ல. இயேசு சாவின் மீது வெற்றி கொண்டார். இறந்து உயிர்பெற்ற அவர் மீண்டும் இறக்கமாட்டார். மனித அறிவு இந்த உண்மையை முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாது. எனவே தான், நாம் இயேசுவின் உயிர்த்தெழுதல் வரலாறு கடந்த நிகழ்வு எனவும், நம் நம்பிக்கையின் மையம் எனவும் கூறுகிறோம். இறந்த இயேசு மீண்டும் தம் நடுவே தோன்றியதைக் கண்ட சீடர்கள் அச்சத்தால் நடுங்கினார்கள். இயேசு ஓர் ஆவி போல அவர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும். எனவே அவர்கள் கலங்கினார்கள். அவர்களது உள்ளத்தில் ஐயம் மேலோங்கியது. அதைக் கண்ட இயேசு தாம் உண்மையிலேயே அவர்கள் நடுவே இருப்பதை எடுத்துக் காட்டுவதற்காகவும், அவர்களின் நம்பிக்கையின்மையைப் போக்குவதற்காகவும் மூன்று செயல்களைச் செய்கிறார்.

1. தமது கைகளையும், கால்களையும் அவர்களுக்குக் காண்பிக்கிறார்.
2. அவர்களிடமிருந்து மீன் துண்டு ஒன்றை வாங்கி அவர்களோடு அமர்ந்து உண்கிறார்.
3. மறைநூலை அவர்களுக்கு விளக்கி, அவர்களது மனக்கண்களைத் திறக்கிறார்.

இவ்வாறு அவர்களது உள்ளத்திலிருந்த நம்பிக்கையின்மையை அகற்றி, இறை நம்பிக்கையை ஊட்டுகிறார். நாமும் இயேசுவின் உயிர்ப்பில், ஆற்றலில், புதுவாழ்வில் நம்பிக்கை குறைந்திருந்தால், இயேசுவின் உயிர்ப்பு அவற்றை நீக்கும். அவரிடம் நம்மை ஒப்புக்கொடுப்போம்.

இயேசு உடலற்ற ஆவியல்ல. அவர் உடலோடு உயிர்பெற்றெழுந்தார். ஆனால் உயிர்பெற்றெழுந்த இயேசுவின் உடல் பருப்பொருளாகிய நம் உடல் போலல்லாமல் மாட்சிமை பெற்ற உடலாக மாறியது என நாம் நம்புகிறோம். இதையே தூய பவுல் ஆவிக்குரிய உடல் என விளக்குகிறார் (1 கொரிந்தியர் 15:44). நாமும் சாவுக்குப் பின் கடவுளின் வல்லமையால் உடலோடு உயிர்பெற்றெழுவோம் என நம்புகிறோம். அதுபோலவே, அன்னை மரியா உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பது கத்தோலிக்க கிறிஸ்தவ நம்பிக்கை.

இயேசு உண்மையிலேயே கடவுளும் மனிதருமாக இருந்தார். அவருடைய மனிதத் தன்மை அவருடைய சாவோடு மறைந்துவிடவில்லை, மாறாக, அவர் மாட்சிமைபெற்ற உடலோடு கடவுளின் இணைப்பில் உள்ளார் என நாம் நம்புகிறோம். அவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார் என்பதும் நம் நம்பிக்கை. ஆக, 'என் கைகளையும் கால்களையும் பாருங்கள்' என இயேசு நம்மைப் பார்த்துக் கூறுவது நாம் அவருடைய கடவுள் தன்மையையும் மனிதத் தன்மையையும் இணைத்துப் பார்க்க நமக்கு விடுக்கப்படுகின்ற அழைப்பாக உள்ளது. நமக்காக மனிதரான இயேசு நாம் கடவுள் தன்மையில் பங்கேற்க வழிவகுத்தார். இயேசுவை நம் வழியாகக் கொண்டு நாம் பயணம் செய்தால் கடவுளின் வாழ்வில் பங்கேற்று, எந்நாளும் மகிழ்ந்திருப்போம். நல்வாழ்த்துக்கள்.

# ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 15-04-2018, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம்
மதியம் 2:30 முதல் 4:00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.
நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தத் தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

# GIFT திட்டத்திற்கான இரண்டாவது காணிக்கை

இன்றையத் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை நமது உயர்மறைமாவட்டத்தின் **GIFT** (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். அதற்கான உங்கள் பங்களிப்புகளைக் காணிக்கைப் பைகளில் போடும்படி அன்புடன் வேண்டுகிறோம். இக்காணிக்கையானது நமது உயர்மறைமாவட்டத்தில் செயல்படும் பல்வேறு அமைப்புகளுக்காகவும் கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்

**சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.

## முழு இரவுத் திருவிழிப்புச் செப வழிபாடு

**12-05-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

## 14வது குருத்துவ ஆண்டு நிறைவு

**14-04-2018** அன்று நமது அன்புத் தந்தை அருட்திரு. நித்திய சகாயராஜ் அவர்களின் **14**வது குருத்துவ ஆண்டு நிறைவு நாள். அன்பான ஒரு தந்தையை நம் ஆலயத்திற்கு தந்த இறைவனுக்கும், அவரது பெற்றோருக்கும் நன்றி கூறி, அவரது அருட்பணி மேன்மேலும் சிறந்தோங்க இன்றைய திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம். பங்குத் தந்தையர் மற்றும் பங்கு மக்கள் சார்பாக தந்தை அவர்களுக்கு நமது மனமார்ந்த வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்வோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| து | ந் | யா | தை | த் | ணை | ண் | லெ | ல் | ந |
| சா | ட் | சி | க | ள் | உ | ள் | ள | மு | ம் |
| ஒ | த | மெ | வெ | ட | யி | ஓ | ட் | கா | பீ |
| ளி | ர | டு | ற் | அ | ரு | பு | ம | பி | னா |
| லை | யா | ன் | றி | ல | ரை | வே | க | சா | ய் |
| கு | நூ | ஒ | பு | வ | ய் | ஞா | மூ | த் | ரூ |
| பெ | மை | றை | ன | சா | மை | வி | வா | ம் | யா |
| கே | அ | றா | ம | த | லா | பொ | ய் | ய | ர் |
| க் | ற் | டி | ட் | வி | வ | றை | லி | ஐ | மெ |
| ஊ | கா | மே | து | த் | ணி | க | க் | ற | பு |

1. நீங்கள் அவரைப் _________ப் பிலாத்திடம் ஒப்புவித்து விட்டீர்கள்.
2. வாழ்வுக்கு _________ நீங்கள் கொன்று விட்டீர்கள்.
3. உமது முகத்தின் _________ எம்மீது வீசச் செய்யும் ஆண்டவரே.
4. ஆண்டவராகிய இயேசுவே, _________ எங்களுக்கு விளக்கியருளும்.
5. நம் பாவங்களுக்குக் _________ அவரே.
6. அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்காதோர் _________.
7. ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் _________ கொள்கிறீர்கள்?
8. _________ துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும்.
9. இவற்றுக்கு நீங்கள் _________.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதலாம் வாசகம்: | திருத்தூதர்பணிகள் 3 : 13 – 15, 17 – 19 |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 4 : 1, 6, 8 |
| பதிலுரை: உமது முகத்தின் ஒளி எம்மீது வீசச் செய்யும் ஆண்டவரே. | |
| இரண்டாம் வாசகம்: | 1 யோவான் 2 : 1 – 5 |
| நற்செய்தி வாழ்த்தொலி: அல்லேலூயா! அல்லேலூயா! ஆண்டவராகிய இயேசுவே, மறைநூலை எங்களுக்கு விளக்கியருளும். நீர் எம்மோடு பேசும் போது எம் உள்ளம் பற்றி எரியச் செய்தருளும். அல்லேலூயா! | |
| நற்செய்தி வாசகம்: | லூக்கா 24 : 35 – 48 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 6:30 மணி<br>தொடர்ந்து திருப்பலி 7:30 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.